Dhinathdhalam@gmail.com www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 003 | வெள்ளிக்கிழமை Friday | 03.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி தான்





## ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

ஈரோடு: "காலால் தவழ்ந்து சென்று, காலை வாரிவிட்டு ஆட்சிக்கு வந்தோம். இந்த திமுகவும் ஸ்டாலினும் ஒரு தேர்தலில் கூட ஜெயிக்க விடுவதில்லை என்ற பொறாமையில் பொய்யையும் புரளியையும் பரப்புகிறார் எடப்பாடி பழனிசாமி" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் அவர் பேசும்போது, "பெரியார் பிறந்த மண் ஈரோடு. நான் பிரசாரத்திற்கு செல்லும் இடமெல்லாம் மக்கள் பாசத்தைபொழிகின்றனர். தமிழ்நாட்டு மக்கள் இந்த தேர்தலில் என் டி ஏ கூட்டணிக்கு ஏமாற்றத்தை அளிப்பார்கள். டபுள் எஞ்சின் தமிழ்நாட்டில் தடம்புரண்டுதான் போகும்.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் இந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் நீங்கள் மகிழ்ச்சியுடன் இருந்திருப்பீர்கள். காரணம்,திராவிடமாடல் என்பது 'டெவலப்மெண்ட் மாடல்'. கடந்த 5 ஆண்டுகளில் ஈரோடு மாவட்டத்திற்கு ஏராளமான திட்டங்கள் திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்பட்டுள்ளது.குகாலால் தவழ்ந்து சென்று, காலை வாரிவிட்டு ஆட்சிக்கு வந்தோம். இந்த திமுகவும் ஸ்டாலினும் ஒரு தேர்தலில் கூட ஜெயிக்க விடுவதில்லை என்ற பொறாமையில் பொய்யையும் புரளியையும்பரப்புகிறார் எடப்பாடி பழனிசாமி. மெட்ரோ ரயில் திட்டம், 100 நாள் வேலை திட்டத்தை ஒழித்தது, நீட், சிஏஏ சட்டம் கொண்டு வந்தது, வேளாண் சட்டம், கல்வி நிதியை தராதது, ஜிஎஸ்டி இழப்பீடு, மாநில உரிமைகளை பறிப்பது என துரோகங்களின் முழு உருவமாக இருப்பதுதான் இபிஎஸும் அவருடைய கூட்டாளிகளான பாஜகவும்.

பொள்ளாச்சிவழக்கை விசாரிக்க முன்வராத பழனிசாமிக்கு பெண்கள் பாதுகாப்பை பற்றி பேச அருகதை இருக்கிறதா? சிறுமிகள் மீதான பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுவோருக்கு மரணதண்டனை தரும் அளவுக்கு சட்டங்களை கொண்டு வந்துள்ளோம். பெண்களை பாதுகாத்து கல்லூரிகளுக்கும் வேலைகளுக்கும் அனுப்பி வைத்து தலை நிமிர வைத்திருப்பதுதிராவிடமாடல்அரசு.

இந்த உண்மைகளை, அவதூறுகளை பரப்பி மறைக்கலாம், திசை திருப்பலாம், என் டி ஏ ஆட்சியை கொண்டு வந்து தமிழ்நாட்டை கபளீகரம் செய்யலாம் என கற்பனை கோட்டையில் இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி" என தெரிவித்தார்.

றிப்பாக நீண்ட நாள் கோரிக்கையான அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி தான்.ஆட்சிக்கு வந்ததும் ஈரோட்டில் மஞ்சள் ஆராய்ச்சி மையம் திறக்கப்பட்டது. ஈரோடு பேருந்து நிலையம், அணைக்கட்டுக்கு நிலம் வழங்கியவர்களுக்கு அயன் பட்டாக்களை உடனடியாக வழங்கியதும் திராவிட மாடல் ஆட்சிதான் அனைத்துத் துறைகளின் வளர்ச்சியாகவும், அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றமாகவும், அனைத்து மாவட்டங்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றமாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்து பார்த்து செயல்படுத்தி வருகிறோம்.

வேளாண்மை, உட்கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்பம், கல்வி உள்ளிட்ட அனைத்து வளர்ச்சி திட்டங்களையும் நிறைவேற்றிய உரிமையுடன் நான் கம்பீரமாக வாக்குக் கேட்கிறேன். ஆனால், நம்மை எதிர்த்து வாக்குக் கேட்பவர்கள் நமது திட்டங்களைப் பற்றி பேசுவதில்லை. அவர்களின் விமர்சனங்களை பார்க்கும்போது சிரிப்பாகத்தான் இருக்கிறது.திராவிடமாடல் 2.0 ஆட்சியில் உலகமே திரும்பி பார்க்கும் வகையில் தமிழ்நாட்டை உயர்த்துவோம்.

# சட்டம் ஒழுங்கு சீரழிந்துவிட்டது டிஜிபியை கூட முதலமைச்சரால் நியமிக்க முடியவில்லை: எடப்பாடி பழனிசாமி விமர்சனம்



சிவகங்கை: திமுக ஆட்சியில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீரழிந்துவிட்டதாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

சிவகங்கை அரண்மனை வாசலில் நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் பேசிய எடப்பாடி பழனிசாமி தமிழ்நாடு அரசின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

அப்போது பேசிய அவர், "தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு மிக மோசமாக உள்ளது. கிராமம் முதல் நகரம் வரை கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனை அதிகரித்து விட்டது. இது தொடர்பாக நான் சட்டமன்றத்திலும் பலமுறை எடுத்துரைத்துள்ளேன். தமிழகம் இன்று போதைப்பொருள் நிரம்பிய மாநிலமாக மாறியுள்ளது. இதற்கு மு.க.ஸ்டாலின் அரசு பொறுப்பேற்க வேண்டும். போதைப் பொருள் பயன்படுத்தும் நபர்களால் கொலை, கொள்ளை, திருட்டு போன்ற குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பாலியல் சீண்டலுக்கு உள்ளாகியுள்ளனர். அதில் பல வழக்குகள் போக்சோ சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும்தாய்மார்களுக்கு பாதுகாப்பு இல்லை. திமுக ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளது.சட்டம் ஒழுங்கு விவகாரத்தில் அதிமுக ஆட்சி குறித்து பேசுவதற்கு முதல்வருக்கு அருகதையில்லை. அவதூறு பிரச்சாரங்களை மு.க. ஸ்டாலின் தொடர்ந்து மேற்கொண்டால், அதிமுக தொண்டர்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள்.

**நிரந்தர டிஜிபி எங்கே?**

மாநிலத்தில் சட்டம்-- ஒழுங்கு மோசமடைந்ததற்கு நிரந்தர டிஜிபி நியமிக்கப்படாதது மிக முக்கிய காரணம். ஒரு மாநிலத்தை ஆளும் முதலவமைச்சரால் ஒரு டிஜிபியை கூட நியமிக்க முடியவில்லை. நீதிமன்றம் தலையிட்ட பிறகே சில நியமனங்கள் நடைபெறுகின்றன. அந்த வகையில்,தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை தேடி கண்டுப்பிடிக்க வேண்டிய நிலை உள்ளது.

**போதைப்பொருள் விற்பனை**

தமிழ்நாட்டில் போதைப்பொருள் விற்பனை அனைத்து இடங்களில் நடைபெறுகிறது. இதை கட்டுப்படுத்ததமிழக அரசு முற்றிலும் தவறிவிட்டது.திமுகதுணையோடு தமிழகத்தில் சில இடங்களில் போதைப் பொருட்கள் விற்கப்படுவதாக தகவல் வெளியாகி வருகிறது. அதிமுக ஆட்சி வந்தால் மூன்று மாதங்களுக்குள் தமிழகத்தில் போதைப்பொருள் விற்பனையை முழுவதும் ஒழிப்போம். அதிமுக ஆட்சி இருக்கும் வரை போதைப்பொருள் தடுப்பு மிகக் கடுமையாக அமல்படுத்தப்பட்டது. ஆனால், திமுக ஆட்சியில் நிர்வாகிகள், அதிகாரிகள் துணையோடு போதைப்பொருட்கள் விற்பனை நடைபெறுகிறது.

திமுக ஆட்சியில் எழுதாத பேனாவுக்கு நடுக்கடலில் சிலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக மக்கள் வரிப்பணம் சுமார் ரூ.84 கோடி செலவிட இருப்பதாக கூறப்படுகிறது. மக்களுக்கு அடிப்படை உரிமைகளே இன்னும் முழுமையாக கிடைக்காத நிலையில், எழுதாத பேனாவுக்கு மக்கள் வரிப்பணம் செலவிடப்பட வேண்டுமா? கருணாநிதியின் குடும்பத்துக்கு தொடர்புடைய அறக்கட்டளைகளில் ரூ.8,000 கோடி இருப்பதாக கூறப்படுகிறது. மக்கள் வரிப்பணத்தை இப்படி பயன்படுத்துவது நியாயமா? என்பதை தமிழக அரசு விளக்கவேண்டும். மக்கள் வரிப்பணத்தில் நடுக்கடலில் சிலை வைக்காமல் திமுக அரசு மக்கள் நலத்திட்ட பணிகளுக்கு அதனை பயன்படுத்த வேண்டும்" என்றார்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் / ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# சென்னையில் ஆபரணத் தங்கம் சவரனுக்கு ஒரே நாளில் ரூ.2,400 குறைந்தது!

சென்னை: சென்னையில் ஆபரணத் தங்கம் சவரனுக்கு ஒரே நாளில் ரூ.2,400 குறைந்தது. சர்வதேச பொருளாதாரம் மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச்சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. ஈரான் அமெரிக்கா, இஸ்ரேல் இடையிலான போர் காரணமாக தங்கத்தின் விலையில் தாக்கம் ஏற்பட்டுள்ளது. தங்கம் விலை வாரத்தின் தொடக்க நாளான திங்கள்கிளமைகாலையில் தங்கம் விலை சற்று குறைந்தது.



அதாவது தங்கம் விலை கிராமுக்கு ரூ.60 குறைந்து ஒரு கிராம் ரூ.13.600க்கும், பவுனுக்கு ரூ.480 குறைந்து ஒரு பவுன் ரூ.1,08,800க்கும் விற்பனையானது.மாலையில் தங்கம் விலை திடீரென உயர்ந்தது. அதாவது தங்கம்விலைகிராமுக்கு ரூ.170 உயர்ந்து ஒரு கிராம் ரூ.13,770க்கும், பவுனுக்கு ரூ.1,360 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 10 ஆயிரத்து 160க்கும் விற்பனையானது. இந்நிலையில் நேற்று காலையில் தங்கம் விலை கிராமுக்கு ரூ.380 உயர்ந்து , ஒரு கிராம் ரூ.14,050க்கும், பவுனுக்கு ரூ.3040 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 12,400க்கும் விற்பனையானது. இதே போல வெள்ளி விலையும் உயர்ந்தது.அரசியல் விவாதம்

வெள்ளி விலை கிராமுக்கு ரூ.15 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.265க்கு, கிலோவுக்கு ரூ.15,000 உயர்ந்து, பார் வெள்ளி ரூ.2.65 லட்சத்துக்கும் விற்பனை யானது.

இதனையடுத்து காலை தங்கம் விலை சவரனுக்கு ரூ.800 குறைந்து ரூ.1,11,600க்கு விற்பனை செய்யப்படுகிறது. சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.100 குறைந்து ரூ.13,950க்கு விற்பனை செய்யப்படுகிறது. சென்னையில் வெள்ளி விலை கிராம் ரூ.10 குறைந்து ரூ.255க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில், சென்னையில் ஆபரணத் தங்கம் சவரனுக்கு ஒரே நாளில் ரூ.2,400 குறைந்தது. தங்கம் விலை காலையில் சவரனுக்கு ரூ.800 குறைந்திருந்த நிலையில், தற்போது ரூ.1,600 குறைந்து ரூ.1,10,000க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆபரணத்தங்கம் விலை கிராமுக்கு ஒரே நாளில் ரூ.300 குறைந்து ஒரு கிராம் ரூ.13,750க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# திருப்புவனம் & மானாமதுரையில் தமிழரசியை ஆதரித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட கனிமொழி எம்.பி.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் மற்றும் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்



அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரும், முன்னாள் அமைச்சர், திமுக மாநில மகளிர் தொண்டரணி இணைச் செயலாளருமான திருமதி தமிழரசி ரவிக்குமார் அவர்களை உதயசூரியன் சின்னத்தில் ஆதரித்து, கடந்த திமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், தற்போது அறிவித்துள்ள தேர்தல் வாக்குறுதி மற்றும் மானாமதுரை சட்டமன்றத்தொகுதியில் தமிழரசி ரவிக்குமார் நிறைவேற்றிய திட்ட பணிகள் குறித்தும் வாக்காளர் பெருமக்களிடம் எடுத்துரைத்து தேர்தல் பரப்புரை பிரச்சாரத்தினை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், திமுக துணை பொது செயலாளருமான திருமதி கனிமொழி கருணாநிதி அவர்கள் திருப்புவனம் சந்தை திடல் மற்றும் மானாமதுரை தேவர் சிலை அருகில் தமிழரசி ரவிக்குமார் அவர்களை உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, மாபெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்யுமாறு வாக்காளர் பெருமக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பு ஈடுபட்டு, தனது முதற்கட்ட தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட கழக செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன், துணை செயலாளர் சேங்கைமாறன், நகர் கழகசெயலாளர் பொன்னுசாமி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளான திமுக, காங்கிரஸ், தேமுதிக, விசிக, சிபிஎம், சிபிஐ, மதிமுக, முக்குலத்தோர் புலிப்படை, மமீக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், எஸ்டிபிஐ உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெரும் திரளாக கலந்துகொண்டு வாக்காளர் பெருமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர். நடைபெற்ற இந்த வாக்கு சேகரிப்பு பிரச்சாரத்தில் வேட்பாளர் தமிழரசிக்கு கூட்டணிக் கட்சியினர் மற்றும் வாக்காளர் பெருமக்கள் மாபெரும் ஆதரவு அளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுராந்தகம் நகரில் அதிமுக வேட்பாளர் மரகதம் குமரவேல் திறந்த வாகனத்தில் வீதி வீதியாக சென்று தீவிர வாக்கு சேகரிப்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகர் பகுதியில் உள்ள புரட்சித் தலைவர் எம்ஜிஆர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து வாக்கு சேகரிப்பில் ஈடுபடும் நிகழ்ச்சியினை மதுராந்தகம் நகரக் கழக செயலாளர் பூக்கடை கேசிசரவணன் ஏற்பாட்டில் நடைபெற்றது மதுராந்தகம் அதிமுக வேட்பாளர் மரகதம் குமரவேல் அவர்கள் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து தேர்தல் பிரச்சாரத்தை திறந்த வாகனத்தில் சென்று மதுராந்தகம் நகர் பகுதி 12 வார்டுகளில் தீவிர



வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் இப்போது மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைச் செயலாளர் கார்த்திக் சுந்தரம் அவர்களின் ஏற்பாட்டில் வேட்பாளர் அவர்களுக்கு மாலை அணிவித்து ஆரத்தி எடுத்து திருஷ்டி பூசணிக்காய் உடைத்து சிறப்பான வரையறுப்பு அளித்தனர் அப்போது வேட்பாளர் பேசுகையில் திமுக ஆட்சியில் சொத்து வரி வித்தியாசமான பொருட்களின் விலைவாசி உயர்ந்துள்ளது குழந்தைகள் முதல் மூதாட்டி வரை இந்த ஆட்சியில் பாதுகாக்கப்பட்ட ஆட்சியாக உள்ளது எனப் பேசினால் மீண்டும் அதிமுக ஆட்சி அமைய இரட்டை இலை சின்னத்துக்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக கிளைக் கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் ( மதியம் 12.00 மணியளவில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அவர்கள் தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி மாவட்டச்செயலாளர்கள்ஆலோசனைக்கூட்டம்நடைபெற்றது. கூட்டணிக் கட்சி மாவட்டச் செயலாளர்கள் கலந்து கொண்டனர் இதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இணை அமைப்பாளர் அன்பகம் கலை அவர்கள் வருகை புரிந்து நமது வெற்றி வேட்பாளர் மருத்துவர் கலைக்கதிரவன் அவர்கள் வெற்றி குறித்து ஆலோசிக்கப்பட்டது இதில் மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட தலைவர் நைனார் முகமது மாவட்ட செயலாளர் சலீம் அவர்கள் கலந்து கொண்டனர்.

# 64 தொகுதிகளில் சசிகலா கட்சி போட்டி

அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்றகட்சியைத்தொடங்கியுள்ள சசிகலா, சட்டப்பேரவைத் தேர்தலில் பாமக நிறுவனர் ராமதாஸுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுகிறார்.முதல்கட்டமாக 21 வேட்பாளர்கள், அடுத்து 38 வேட்பாளர்களை அறிவித்த நிலையில், நேற்று 5



பேர் கொண்ட 3-ம் பட்டியலை சசிகலா வெளியிட்டுள்ளார். மொத்தத்தில் சசிகலா கட்சி 64 தொகுதிகளில் போட்டியிடுகிறது. சசிகலா தரப்பில் கூட்டணிகட்சிகளுக்கு 13 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த கூட்டணியில் பாமக சார்பில் இதுவரை 25 தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் தாலுகா கோலப்பாறை கிராமத்தில் உள்ள ஸ்ரீ பால தண்டாயுதபாணி திருக்கோவிலில் பங்குனி உத்திர திருநாளை முன்னிட்டு குன்றின் உச்சியில் உள்ள முருகர் கோவில் கிராம மக்கள் ஒன்றிணைந்து தேர் இழுத்தும் காவடிதூக்கிமுருகனைவழிபட்டுமுருகனுக்காகசிறப்புசெய்தனர்.மேலும்ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம மக்கள் அரோகரா ஓம் முருகா என முழக்கங்களை எழுப்பி முருகனின் தரிசனம் பெற்று வணங்கிச் சென்றனர் மேலும் அனைத்து மக்களுக்கும் கிராம மக்கள் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது .

# மானாமதுரையில் முத்து ஆமினா முஸ்லிம் பள்ளியில் ஆண்டு விழா கோலாகலம்




சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கன்னார் தெருவில் செயல்பட்டு வரும் முத்து ஆமினா முஸ்லிம் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியில் நடப்பு கல்வியாண்டிற்கான ஆண்டு விழா மற்றும் பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவிற்கு பள்ளி தாளாளர் இப்ராஹிம் கனி தலைமை தாங்கினார்.நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக இளையான்குடி டாக்டர் ஜாகிர் உசேன் கல்லூரியின் துணை முதல்வர் மற்றும் இணைப் பேராசிரியரான சுல்தான் செய்யது இப்ராஹிம் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். நிகழ்ச்சியின் தொடக்கமாக தமிழ் தாய் வாழ்த்து பாடப்பட்டு, தொடர்ந்து மாணவர்களின் வரவேற்பு உரை இடம்பெற்றது. பின்னர் மாணவர்கள் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சி களில் பங்கேற்று, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். குறிப்பாக நடனம், பாடல், நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை கவர்ந்தன.

அதனைத் தொடர்ந்து கல்வி, விளையாட்டு மற்றும் பல்துறை சாதனைகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சிறப்பு விருந்தினர் தனது உரையில், மாணவர்கள் கல்வியுடன் ஒழுக்கத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், எதிர்காலத்தில் உயர்ந்த நிலையை அடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினர்.

# செய்யூர் தனி சட்டமன்ற தோகுதி அதிமுக வேட்பாளர் ராஜசேகர் வேட்பு மனு தாக்கல்



செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் சட்டமன்ற தொகுதிக்கு அதிமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பெரும்பாக்கம் ராஜசேகர் தேர்தல் நடத்தும் அலுவலர் வெங்கடாசலமிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அப்போது மாநிலங்களவை எம்பி. தனபால், செங்கல்பட்டு கிழக்கு அதிமுக மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ்.ஆறுமுகம், பாஜக மாவட்ட தலைவர் டாக்டர் மா.பிரவீன்குமார், பாமக மாவட்ட செயலாளர் கி.கணபதி ஆகியோர் உடனிருந்தனர்.

# வண்ணார்பேட்டை MSP பாய்ஸ் இளைஞரணி நடத்தும் மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது



தூத்துக்குடி சங்கரப்பேரி கான் மெட்டல் மைதானத்தில் வண்ணார்பேட்டை எம்.எஸ்.பி. பாய்ஸ் இளைஞரணி நடத்தும் மாபெரும் கிரிக்கெட்

போட்டியில் மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி சக்திவேல், சேவியர், ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்த போட்டியில் பல்வேறு அணிகள் பங்கேற்றன மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிக்கு கோப்பை மற்றும் பரிசுத்தொகையை வழங்கி வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன், தவெக அஜிதா ஆக்னல், வசந்தகுமாரி, இராபாலன்,கிளைச்செயலாளர் சேசு ராஜா,ஊர் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஓமலூர் வழக்கறிஞர் சங்கத் தேர்தலில் வெற்றி பெற்ற நிர்வாகிகள் பதவி ஏற்பு



சேலம்மாவட்டம்ஓமலூரில்குற்றவியல்நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம்,சார்பு நீதிமன்றம்,விரைவு நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகிறது. இங்கு ஓமலூர், தாரமங்கலம் ,தொளசம்பட்டி,காடையாம்பட்டி, மேட்டூர், சேலம் ஆகிய பகுதியைச் சேர்ந்த 143க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில், ஓமலூர் நீதிமன்றங்களாகத்தில் உள்ள வழக்கறிஞர் சங்கத்திற்கான தேர்தல் மார்ச் 18ஆம் தேதி விறுவிறுப்பாக நடைபெற்றது. 143 உறுப்பினர்களைக் கொண்ட ஓமலூர் வழக்கறிஞர் சங்கத்தில் 134 வழக்கறிஞர்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.தலைவருக்கு போட்டியிட்ட பழனிச்சாமி 80 வாக்குகள் பெற்று 20 வாக்குகள் வித்தியாசத்தில்வெற்றிபெற்றார்.நூலகர்பதவிக்கான தேர்தலில் போட்டியிட்ட கண்ணன் 109 வாக்குகள் பெற்று 84வாக்குகள் வித்தியாசத்தில்அமோகவெற்றி பெற்றார். துணை தலைவர் G.பிரபு, செயலாளர் ஜெமினி சங்கர்,பொருளாளர் அசோக்குமார் மற்றும் நிர்வாகிகள் போட்டி இன்றி தேர்வு பெற்றனர். தேர்தலில் வெற்றி பெற்ற வழக்கறிஞர்கள் ஏப்ரல் 1 ஆம் தேதி பதவி ஏற்று கொண்டனர்.

# நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ் ராஜினாமா



மாநகராட்சியின் மேயராக இருக்கும் 4 பேர் தமிழக சட்டசபை தேர்தலில் திமுகவின் வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர். அதன்படி, நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கன்னியாகுமரி தொகுதியில் போட்டியிடுகிறார்.

மேலும், ஒசூர் மாநகராட்சி மேயராக இருக்கும் சத்யா, ஒசூர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு இருக்கிறார். திருப்பூர் மேயராக இருக்கும் தினேஷ்குமார்,திருப்பூர்தெற்குதொகுதிவேட்பாளராக களம் இறங்குகிறார்.தஞ்சை மாநகராட்சி மேயர் ராமநாதன், தஞ்சை தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு உள்ளார்.

நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதியின் திமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நிலையில் அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார். ராஜினாமா கடிதத்தை ஆணையர் நிசாந்த் கிருஷ்ணாவிடம் வழங்கினார்.

# அமைச்சரவை முடிவை நிராகரிக்க ஆளுநருக்கு அதிகாரம் இல்லை ; உயர்நீதிமன்றம் முக்கிய தீர்ப்பு



கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்வது மற்றும் தண்டனையை குறைப்பது போன்ற விவகாரங்களில், அமைச்சரவையின் முடிவை நிராகரிக்கஆளுநருக்கு தன்னிச்சையாக அதிகாரம் கிடையாது என்று சென்னை உயர்நீதிமன்ற முழு அமர்வு தீர்ப்பளித்துள்ளது. சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகமாணவன்நாவரசுகொலைவழக்கில், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஜான் டேவிட்டை முன்கூட்டி விடுதலை செய்ய ஆளுநருக்கு தமிழக அமைச்சரவை பரிந்துரை செய்தது. தமிழக அமைச்சரவையின் இந்த பரிந்துரையை ஆளுநர் நிராகரித்ததை எதிர்த்து, தமிழ்நாடு அரசு சார்பிலும், ஜான்டேவிட்சார்பிலும்சென்னைஉயர்நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகளை விசாரித்த நீதிபதிகள் எம்.எஸ். ரமேஷ் மற்றும் லட்சுமி நாராயணன் ஆகியோர், மாறுபட்ட தீர்ப்புகளை வழங்கினர். இதனால், கைதிகளின் தண்டனை குறைப்பு மற்றும் முன்கூட்டியே விடுதலை செய்யும் அரசின் அமைச்சரவை முடிவுக்கு ஆளுநர் கட்டுப்பட்டவரா? எந்தெந்த சூழல்களில் ஆளுநர் தன்னிச்சையாக செயல்பட முடியும்? என்பது குறித்து 3 நீதிபதிகள் கொண்டஅமர்வுவிசாரிக்கபரிந்துரைசெய்யப்பட்டது.

அதன்படி, இந்த வழக்கு நீதிபதிகள் ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா,ஜி.கே.இளந்திரையன்மற்றும்சுந்தர்மோகன் ஆகியோரை கொண்ட அமர்வு முன் கடந்த முறை விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் மாநில தலைமைகுற்றவியல்வழக்குரைஞர்அசன்முகம்மது ஜின்னா ஆஜராகி வாதிட்டார்.

அப்போது அவர், "அரசியலமைப்பின்படி அமைச்சரவையின் பரிந்துரையின்படியே ஆளுநர் செயல்பட முடியும். மேலும், ஆளுநர் மாநில அரசின் நிர்வாக செயல்பாடுகளில் தனிப்பட்ட முறையில் முடிவெடுக்க முடியாது. அமைச்சரவையின் ஆலோசனைமற்றும்பரிந்துரையின்படியேசெயல்பட முடியும் என்று உச்ச நீதிமன்ற 7 நீதிபதிகள் அடங்கிய அமர்வு உறுதிப்படுத்தி உள்ளது. ஆளுநர் பெயரளவிலான தலைவர் (Symbolic Head) மட்டுமே. முன்கூட்டியேவிடுதலைசெய்யும்அமைச்சரவையின் முடிவுகளில்ஆளுநர்ஒப்புதலின்றிகூடஅரசுஉத்தரவு பிறப்பிக்க முடியும் என்று உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அமர்வு கூறியுள்ளது.

# திமுக தேர்தல் வாக்குறுதியை தந்தால் அதை நிறைவேற்றும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது தூத்துக்குடியில் கனிமொழி எம்.பி. பேட்டி



நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தூத்துக்குடி கலைஞர் அரங்கத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி தேர்தல் அலுவலகத்தை திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கனிமொழி கருணாநிதி எம்.பி., "மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரித்து, திமுக சார்பில் நாளை எனது பிரச்சாரத்தை கீழடியில் தொடங்க உள்ளேன்" என்று தெரிவித்தார்.

தூத்துக்குடியைப் பொறுத்தவரை, கீதா ஜீவன் வெற்றி பெறக்கூடிய வேட்பாளர் என்று என்னால் சொல்ல முடியும். காரணம், தொடர்ந்து மக்கள் பணியை செய்து வரும் ஒருவர்; தொகுதி மக்களுடன் பரிச்சயம் உடையவர். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைகளிலும், அமைச்சராக அவர் செய்துள்ள பல பணிகளிலும், நமது முதல்வருக்கு பெருமை சேர்த்த வகையில் பணிகளை செய்து இருக்கிறார்.

திமுக ஆட்சி மக்களுக்கான ஆட்சியாகவும், முக்கியமான பெண்களுக்கான, பெண்களை உயர்த்தக்கூடிய ஆட்சியாக அமைந்துள்ளது. இளைஞர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி திட்டமிடக்கூடிய பல்வேறு தொழில் முதலீடுகளைக் கொண்டு வந்து வேலை வாய்ப்பை உருவாக்கிய ஆட்சியாக அமைந்துள்ளது.

மற்ற தேர்தல் அறிக்கையை மக்கள் திரும்பி கூட பார்க்காத சூழலில், திமுக தேர்தல் அறிக்கை கொண்டாட கூடிய சூழ்நிலை இருக்கிறது என்றால் அதற்கு காரணம் திமுக எந்த வாக்குறுதியை தந்தாலும் அதை நிறைவேற்றும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது.

நம்முடைய முதல்வர் தேர்தல் நேரத்தில் தந்து இருக்கக்கூடிய வாக்குறுதிகளை மக்கள் அவலோடும், திமுக மறுபடியும் ஆட்சிக்கு வந்து நிறைவேற்றி தர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். விரைவில் முதல்வர் ஸ்டாலின் ஆட்சி மீண்டும் அமையப் போகிறது; மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம். புதிய வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டதில் எதிர்ப்புகள் இருப்பது குறித்து கேள்விக்கு, வேட்பாளர்களை மாற்றி அறிவிக்கும் போது சில நேரங்களில் கருத்து வேறுபாடுகள் இருக்கும். கூட்டணி பேச்சுவார்த்தைகளின்போதும் சில சர்ச்சைகள் உருவாகும். எல்லோருக்கும் தெரியும் நாம் கருத்தியலால் ஒன்றுபட்டவர்கள். அதனால், ஒன்றாக இணைந்து பணியாற்றுவோம் வெற்றியை நோக்கி பணியாற்றுவோம். அதேபோன்று எந்தப் பகுதியில் நாம் புதிய வேட்பாளரை அறிவிக்கும் போது அங்கு இருப்பவர்களுக்கு சிறிய வருத்தம் இருந்தாலும் அனைவரும் திராவிட கழக தோழர்களாக இணைந்து பணியாற்ற வேண்டும்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டதாக மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் முன்வைத்த குற்றச்சாட்டு குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, அதற்கு பதில் சொல்ல வேண்டியது அவரே. அவரது குற்றச்சாட்டின்படி சதவிகித அடிப்படையில் பார்க்கும்போது, தேசிய அளவில் தமிழ்நாட்டில்தான் குற்றங்கள் குறைவாக உள்ளது. குற்றங்கள் நடந்தால் கூட அதில் நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆட்சி திமுக ஆட்சி. விரைந்து நடவடிக்கை எடுத்து நியாயம் கிடைக்கக்கூடிய ஆட்சி திமுக ஆட்சி.

பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களை விட, நிச்சயமாக தமிழ்நாட்டில் குற்றங்கள் குறைவாக உள்ளது. அவர்கள் கூட்டணியில் உள்ளவர்கள் தவறு செய்தவர்களை எவ்வாறு காப்பாற்றினர் என்பதும் அனைவருக்கும் தெரியும். இன்று குற்றம் செய்யக் கூடியவர்களுக்கு எப்படி மிக விரைந்து தண்டனை கொடுக்கப்படுகிறது என்பதை நாம் பார்க்கிறோம் என்று பதிலளித்தார்.

தொடர்ந்து, முன்னாள் திமுக தலைவரும், முதலமைச்சருமான மறைந்த கலைஞர் கருணாநிதி திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர், தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கீதா ஜீவனை ஆதரித்து பிரச்சாரத்தை தொடங்கி, கனிமொழி கருணாநிதி எம்.பி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

நிகழ்ச்சியில் மேயர் ஜெகன் பெரியசாமி, காங்கிரஸ் தேசிய செயற்குழு உறுப்பினர் ஏ.பி.சி.வி. சண்முகம், மாநகர மாவட்ட தலைவர் காங்கிரஸ் சகாயராஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் கரும்பன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் கே.பி. ஆறுமுகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் விமல் வெங்காலியார் மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.



# தேசிய முற்போக்கு கூட்டணி சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டம் நடந்தது அதிமுக வேட்பாளர் சி.த.செல்லப்பாண்டியன் வாக்குசேகரித்தார்

தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் அதிமுக வேட்பாளராக சி.த.செல்லப்பாண்டியன் போட்டியிடும் நிலையில், அவரை ஆதரித்து தேசிய முற்போக்கு கூட்டணி சார்பில் 3ம் மைல் மற்றும் அண்ணா நகர் பகுதிகளில் தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அதிமுக வேட்பாளர் செல்லப் பாண்டியன் பேசுகையில்: திமுகவில் பெரும்பாலும் குடும்ப ஆட்சியை நடைபெறுகிறது வாரிசு அரசியல் நடைபெறுகிறது அங்கே மு.க.ஸ்டாலின் உதயநிதி ஸ்டாலின் தூத்துக்குடியில் கீதாஜீவன் மற்றும் ஜெகன் பெரியசாமி என்ற குடும்ப ஆட்சி நடைபெறுகிறது.

எனவும் திமுக ஆட்சியில் தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்ற ப்படவில்லை என குற்றம்சாட்டினார். மதுபான கடைகளில் கூடுதல் விலை வசூல் செய்து ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளதாகவும். மேலும் அமைச்சர் கீதா ஜீவன் மற்றும் தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகின்றன என்றும், நகரில் பூங்காக்களின் பெயர் மாற்றம் உள்ளிட்ட பணிகளில் வெளிப்படைத்தன்மை இல்லை என்றும் கூறினார். தூத்துக்குடியில் கஞ்சா பயன்பாடு அதிகரித்து மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்றும், இதை கட்டுப்படுத்த அரசு போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டினார். மழை, வெள்ள காலங்களில் தாம் மக்களுடன் இருந்து உதவி செய்ததாகவும், அப்போது முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி நேரில் வந்து நிலைமையை ஆய்வு செய்ததாகவும் குறிப்பிட்டார். வரவிருக்கும் தேர்தலில் அதிமுக பெரும் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, எடப்பாடி பழனிசாமி தலைமையில் தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்தார்.

# இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட 3 ராமேஸ்வரம் மீனவர்கள் தாயகம் திரும்பினர்

சென்னை: இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட 3 ராமேஸ்வரம் மீனவர்கள் சென்னை வந்தனர். சென்னை விமான நிலையத்தில் ராமேஸ்வரம் மீனவர்கள் 3 பேரை தமிழக மீன்வளத்துறை அதிகாரிகள் வரவேற்றனர். அரசு ஏற்பாடு செய்த வாகனத்தில் ராமேஸ்வரம் மீனவர்கள் 3 பேரும் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்



# அமெரிக்கா நிரந்தர அவமானத்தை சந்திக்கும் வரை போர் தொடரும்: ஈரான் திட்டவட்டம்



தெஹ்ரான்: அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின்போது தெரிவித்த கருத்துகளுக்கு, ஈரான் ராணுவம் கடுமையான பதிலடி கொடுத்துள்ளது. அமெரிக்கா நிரந்தர அவமானத்தை சந்திக்கும் வரை தற்போதைய போர் நீடிக்கும் என்று ஈரான் எச்சரித்துள்ளது. ஈரான் அரசு ஊடகமான பிரஸ் டிவியில் கதம் அல்-அன்பியா மத்திய தலைமையகத்தின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில், 'எங்கள் ராணுவ ஆற்றல் மற்றும் எங்கள் ஆயுதங்கள் குறித்த அமெரிக்காவின் உளவுத் தகவல் முழுமையற்றது.

எங்களின் உண்மையான ஆற்றலைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. எங்களின் முக்கியமான ஏவுகணை உற்பத்தித் தளங்கள், நீண்ட தூரத் தாக்குதல் ட்ரோன்கள், நவீன வான் பாதுகாப்பு அமைப்புகள், மின்னணுப் போர் மற்றும் சிறப்பு ஆயுதங்களை நீங்கள் அழித்துவிட்டதாக எண்ண வேண்டாம்.

அத்தகைய அனுமானங்கள் நீங்கள் சிக்கியுள்ள சகதியை மேலும் ஆழமாக்கும். நீங்கள் தாக்கியதாக நினைக்கும் எங்கள் தளங்கள் முக்கியமற்றவை; எங்களின் முக்கிய ராணுவ உற்பத்தி, உங்களுக்குத் தெரியாத மற்றும் உங்களால் ஒருபோதும் அடைய முடியாத இடங்களில் நடைபெறுகிறது. எங்களின் ஏவுகணைகள், ட்ரோன்கள் மற்றும் ஆயுத தளங்களை அடைய நீங்கள் முயற்சி செய்ய வேண்டாம்; நீங்கள் தவறாகவே அதனை கணிப்பீர்கள். எதையும் சாதிக்க முடியாது. எங்கள் கண்ணியமிக்க, அன்புக்குரிய, முஸ்லிம் தேசத்துக்கு எதிராக நீங்கள் தொடங்கிய போருக்கு நீங்கள் விலை கொடுக்க வேண்டும். நீங்கள் நிரந்தர அவமானத்தையும், வருத்தத்தையும், சரணடைதலையும் சந்திக்கும் வரை இந்தப் போர் தொடரும்.

நீங்கள் ஏற்கெனவே பெற்ற கடுமையான அடிகளின் தொடர்ச்சியாக, எங்களிடமிருந்து மேலும் பேரழிவை ஏற்படுத்தும் தாக்குதல்களை எதிர்பார்க்கலாம்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதம் அல்-அன்பியா தலைமையகம் என்பது ஈரானின் கட்டளையிடும் மிக முக்கிய அமைப்பாகும். இது ஈரான் ராணுவம் மற்றும் இஸ்லாமியப் புரட்சிகர காவல் படை (IRGC) ஆகியவற்றுக்கு இடையேயான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறது.

முன்னதாக நாட்டு மக்களுக்கு ட்ரம்ப் ஆற்றிய உரையில், "ஈரானுக்கு எதிராக அமெரிக்க ராணுவம் தீர்க்கமான தாக்குதல்களை நடத்தியது. இந்த ராணுவ நடவடிக்கையின் முக்கிய நோக்கம் நிறைவடையும் தருவாயில் உள்ளது. இப்போது ஈரானின் கடல்சார் மற்றும் வான்வழித் திறன்கள் முறையாகச் சிதைக்கப்பட்டுள்ளது.

# சிறையில் 50 நாட்கள், ஓட்டலில் 25 நாட்கள், பேருந்தில் 19 மணி நேரம்: ஈரானில் இருந்து திரும்பிய இந்தியரின் பயண அனுபவம்



புதுடெல்லி: சிறையில் 50 நாட்கள், ஓட்டலில் 25 நாட்கள், பேருந்தில் 19 மணி நேர பயணம் என இந்தியர் ஒருவர் பல சிரமங்களை எதிர்கொண்டு தாயகம் திரும்பியுள்ளார்.

கடந்த ஆண்டு டிசம்பர் 8ம் தேதி சட்டவிரோதமாக டீசல் ஏற்றிச் செல்வதாக கூறி 'எம்.டி. வேலியன்ட் ரோரர்' என்ற எண்ணெய் கப்பலை சர்வதேச கடல் எல்லையில் ஈரான் ராணுவம் சிறைபிடித்தது. கப்பலில் 16 இந்தியர்கள் உள்ளிட்ட 18 ஊழியர்கள் இருந்தனர். இவர்களில் 10 பேர் ஈரானின் பந்தர் அப்பாஸ் நகர சிறையில் அடைக்கப்பட்டனர். இந்திய தூதரகத்தின தலையீட்டை தொடர்ந்து 50 நாள் சிறை வாசத்துக்கு பிறகு இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் டெல்லியின் புறநகர் பகுதியான காஜியாபாத்தை சேர்ந்த கேதன் மேத்தாவும் (37) ஒருவர். கடந்த ஞாயிற்றுக்கிழமை காஜியாபாத் திரும்பிய இவர் தனது திகிலூட்டும் பயண அனுபவம் பற்றி கூறியதாவது: நாங்கள் சிறையை விட்டு வெளியேறி, அங்குள்ள ஒரு ஓட்டலில் தங்கியபோது, போர் மூளப்போவது குறித்து எங்களுக்கு சிறிதும் தெரியாது. ஆனால் மறுநாளே போர் வெடித்ததால் நாங்கள் முற்றிலும் திகைத்துப் போனோம். அனைத்தும் மூடப்பட்டன. விமான நிலையமும் மூடப்பட்டது. நாங்கள் தங்கியிருந்த ஹோட்டல் பந்தர் அப்பாஸ் துறைமுக நகரில் இருந்து வெறும் 600-700 மீட்டர் தொலைவிலேயே இருந்தது. இது ஈரானிய கடற்படையின் முக்கியத் தளம் என்பதால் போரின் தொடக்கத்தில் இருந்தே கடுமையாக தாக்கப்பட்டு வந்தது. நாங்கள் தூதரகத்தைத் தொடர்பு கொண்ட போது, அப்பகுதியில் தாக்குதல் நடத்தப்படுவதால், ஓட்டலை விட்டு வெளியேற வேண்டாம் என்று எங்களுக்கு அறிவுறுத்தினர். ஒவ்வொரு நாளும் குண்டுகள், ஏவுகணைகளின் சத்தத்தை நாங்கள் கேட்டு வந்தோம். ஓட்டல் ஜன்னல்களைத் திறந்தால், எங்கள் கண்களுக்கு முன்பாகவே ஏவுகணைகள் மழையென பொழிவதைக் காண முடிந்தது.

இதையடுத்து நாங்கள் மேற்கொண்ட பேருந்துப் பயணம் இன்னும் ஆபத்து நிறைந்ததாக இருந்தது. பந்தர் அப்பாஸில் இருந்து சுமார் 1,800 கி.மீ. பேருந்தில் பயணம் செய்து ஆர்மீனியாவை அடைந்தோம். இதற்கு 18 முதல் 19 மணி நேரம் வரை ஆனது. வழியெங்கும் குண்டுகள் விழுந்துகொண்டிருந்தன. இப்பயணம் முழுவதும், சுற்றியுள்ள மலைகளிலிருந்து வெடிச் சத்தங்கள் எதிரொலித்துக் கொண்டே இருந்தன.

பேருந்து கடுமையாக குலுங்கியது. இந்த அச்சம் நிறைந்த சூழலுக்கு மத்தியில் எப்படியோ நாங்கள் ஆர்மீனிய எல்லையை அடைந்தோம். இந்த துயரமான அனுபவத்தில் இந்தியத் தூதரக அதிகாரிகள் தொடர்ந்து எங்களுடன் தொடர்பிலேயே இருந்தது மிகவும் ஆறுதல் அளிப்பதாக இருந்தது. இவ்வாறு அவர் தனது பயண அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

# கேரளத்தில் முதல் முறை வாக்காளர்களை கவர அல்வா வழங்கும் தேர்தல் ஆணையம்



திருவனந்தபுரம்: கேரளத்தில் முதல் முறை வாக்காளர்களை கவர அல்வா வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையத்தின் புதுமையான முயற்சியால் முதல் முறை வாக்காளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கேரளத்தில் வரும் 9-ம் தேதி சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில் முதல் முறையாக வாக்களிக்க உள்ள இளம் வாக்காளர்களை கவர அவர்களுக்கு அல்வா வழங்கும் திட்டத்தை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. கேரள தலைமைத் தேர்தல் அதிகாரி ரத்தன் யு. கேல்கர் இதற்கான அறிவிப்பை சில தினங்களுக்கு முன்பு வெளியிட்டார்.

இதன் படி கேரளத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் அல்வா பாக்கெட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்த வாக்குச்சாவடியில் வாக்களிக்க வரும் முதல்முறை வாக்காளர்களுக்கு அல்வா பாக்கெட்களை வழங்கி அவர்களை உற்சாகப்படுத்துமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

முதல் முறை வாக்காளர்கள் யார் என்பதை மாவட்ட தேர்தல் அதிகாரியும் (டிஇஓ), வாக்குச்சாவடி நிலை அதிகாரிகளும் (பிஎல்ஓ) கண்டறிந்து இதற்கான பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

இதற்காக கூடுதல் தன்னார்வலர்களையும் நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையத்தின் புதுமையான முயற்சியால் முதல் முறை வாக்காளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு, சட்டமன்ற தொகுதிகளுக்கு

## தேர்தல் செலவின பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள விஜேஷ் குமார்

## ஊடக சான்றளிப்பு, கண்காணிப்புக்குழு மையத்தின் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு



ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் செலவின பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள ஹலட்கர் ராஜேஷ் நம்தேவ் மற்றும் ஈரோடு கிழக்கு, சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் செலவினபார்வையாளராகநியமிக்கப்பட்டுள்ள விஜேஷ் குமார் , ஆகியோர் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் - 2026 ஐ முன்னிட்டு ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு மையத்தின் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டுஆய்வு மேற்கொண்டார்கள்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் (01.04.2026) அன்று 100, ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதிகளுக்குதேர்தல்செலவின பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளஹலட்கர் ராஜேஷ் நம்தேவ் மற்றும் 98, ஈரோடு கிழக்கு, சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் செலவினபார்வையாளராகநியமிக்கப்பட்டுள்ள விஜேஷ் குமார் ஆகியோர் ஈரோடு மாவட்டத்தில் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 தொடர்பாக, ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு மையத்தின் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு (MCMC)-என்பது இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அமைக்கப்படும் ஒரு முக்கிய குழுவாகும். இக்குழுவானது தேர்தல் காலத்தில் தொலைக்காட்சி, வானொலி, சமூக ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளில் வெளியாகும் அரசியல் விளம்பரங்களைச் சான்றளிக்கவும், கட்டணச் செய்திகளைக் (Paid News) கண்காணிக்கவும் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ஊடக கண்காணிப்பு மையத்தில் தொலைக்காட்சிகள் பொருத்தப்பட்டு இக்கண்காணிப்பு குழுவால் 24 மணிநேரமும் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டு வருகிறது. சுழற்சி முறையில் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றார்கள்.

இந்த ஆய்வின்போது, தொலைக்காட்சிகளில் தேர்தல் பிரச்சாரம் குறித்த செய்திகள், தேர்தல் ஆணையத்தின் விழிப்புணர்வு செய்திகள், கட்டண செய்திகள், பதிவு செய்யப்படுகின்றனவா, தேவையான செய்திகளை நகல் எடுத்து கணினியில் பதிவுசெய்யப்பட்டு வருவதையும் பார்வையிட்டார்கள். மேலும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஒளிபரப்பு விவரங்களை பதிவேடுகளில் பதிவு செய்வதையும், கண்காணிப்பு அலுவலர்களின் வருகைப்பதிவேடுகளையும் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின் போது, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.சுகுமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சிலிண்டர் விவகாரம்: முதலமைச்சர் ஸ்டாலின் டெல்லிக்கு போய் வலியுறுத்தலாமே..?

## திருச்சி பிரசாரத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பேச்சு



திருச்சி:"கரூர் நிகழ்ச்சி எப்படி ஒரு சூழ்ச்சியோ, அதேபோல், ஜனநாயகன் பட வெளியிட்டுக்கும் கூட்டு சதி நடைபெறுகிறது. திமுக வேறு, பாஜக வேறு அல்ல இரண்டுமேஒன்றுதான்" என்று தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

பெரம்பூர் தொகுதியை தொடர்ந்து திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிடவிஜய் இன்று விமானம் மூலம் சென்னையில் இருந்து திருச்சி விமான நிலையம் சென்றார். பின்னர் தொண்டர்கள் படை சூழ பிரச்சார வாகனத்தில் மாவட்ட தேர்தல் அதிகாரியை சந்தித்து தனது வேட்பு மனுவை தாக்கல் செய்த விஜய், அருகில் இருந்த எம்ஜிஆர் சிலைக்கு மரியாதை செலுத்தினார்.

பின்னர் திறந்தவெளி பிரச்சார வாகனத்தில் பேசிய விஜய், "காஸ் பிரச்சினை எப்படி உள்ளது? காஸ் பிரச்சினையால் சிறிய அளவிலான டீ கடைகள் முதல் உணவகங்கள் வரை பாதிப்பை சந்தித்துள்ளன.

இப்படி ஒரு போர் மூலம் இப்படி ஒரு சூழல் ஏற்படும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை (ஈரான் - அமெரிக்க போர்).

இவருக்கு ஒரு பிரச்சனை என்றால் விமானத்தில் டெல்லி சென்று வரும் முதல்வர், காஸ் தட்டுப்பாட்டை போக்க டெல்லி போய் வந்து இருக்கலாமே? இவர்கள் எப்போது சொன்னதை செய்துள்ளனர், அனைத்தும் வெற்று அறிக்கை மட்டுமே.

இவர்கள் 2021ம் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளையே முழுமையாக நிறைவேற்றவில்லை. காஸ் சிலிண்டருக்கு மானியம், கரும்புக்கு ஆதார விலை, ரேஷனில் சர்க்கரை,உளுந்து கூடுதலாக வழங்கல் இப்படி திமுகவின் பொய் வாக்குறுதிகளை அடுக்கிக்கொண்டே போகலாம். எவ்வளவு முறை சொல்வது, இருப்பதிலேயே மிக பெரிய பொய் வாக்குறுதி நீட் தேர்வு ரத்து.

இவர்கள் ஆட்சியில் அரசு பள்ளிகளில் அடிப்படை வசதிகள் கூட இருப்பதில்லை. ஏன்.. ஒரு கிராமத்தில் அடிப்படை வசதிகள் இல்லாமல் இயற்கை உபாதையை கழிக்காக வெளியே சென்ற பிளஸ் 2 மாணவி கொலைசெய்யப்பட்ட அவல நிலை தமிழ்நாட்டில் நிலவுகிறது.



வாணாபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் மூன்றாவது முறையாக போட்டியிடும் வேட்பாளர் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் அவர்கள் தனது ஆதரவாளர்களுடன் சென்று தேர்தல் நடத்தும் அலுவலர் சுமதியிடம் தனது வேட்புமனுவை வழங்கினார்.



ஈரோடு மாவட்டம் திமுக முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் நெடுமாறன் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று உருவப்படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். பின்னர் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் செலவின பார்வையாளர்கள் ஹலட்கர் ராஜேஷ்நம்தேவ், விஜேஷ்குமார் , ஆகியோர் (01.04.2026) அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் செயல்பட்டுவரும் ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு மையத்தின் செயல்பாடுகளை ஆய்வு மேற்கொண்டார்கள்.

## 'சாத்தான்குளம் கொலையில் 9 போலீஸாருக்கும் தூக்கு தண்டனை வழங்குக' சிபிஐ இறுதி வாதம்



மதுரை: சாத்தான்குளம் தந்தை, மகன் கொலைவழக்கில்காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் உட்பட 9 போலீஸாருக்கும் தூக்குதண்டனைவழங்க வேண்டும் என இறுதி வாதத்தில் சிபிஐ கேட்டுக் கொண்டுள்ளது.

ஜெயராஜ் மனைவி நீதிபதி முன்பு நேரில் ஆஜராகி 9 பேருக்கும் உச்சபட்ச தண்டனை வழங்க வேண்டும் என கண்ணீர் மல்க கேட்டுக்கொண்டார். இதையடுத்து 9 பேருக்கான தண்டனை ஏப்ரல் 6-ல் அறிவிக்கப்படும் என நீதிபதி ஒத்திவைத்தார்.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்தவர் ஜெயராஜ். இவர் மகன் பென்னிக்ஸ். இவர்கள் சாத்தான்குளத்தில் செல்போன் கடை நடத்தி வந்தனர். கடந்த 2020 ஜூன் 19-ல் கரோனா ஊரடங்கு கட்டுப்பாட்டு நேரம் தாண்டி கடையை திறந்து வைத்திருந்ததாக கூறி ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவரையும்சாத்தான்குளம் போலீஸார் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.

பின்னர் காவல் நிலையத்தில் வைத்து இரவு முழுவதும் போலீஸார் தாக்கியதில் முதலில் பென்னிக்ஸ், அடுத்து ஜெயராஜ் உயிரிழந்தனர். இதையடுத்து சிபிஐ கொலை வழக்கு பதிவு செய்து காவல் ஆய்வாளர்ஸ்ரீதர்,சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், காவலர்கள் முருகன், சாமதுரை, முத்துராஜா, செல்லத்துரை,தாமஸ்பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோர் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்ற நீதிபதி முத்துக்குமரன் விசாரித்து, 9 பேரும் குற்றவாளிகள் என அறிவித்தார். இவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கான விசாரணை நீதிபதி முன்பு இன்று நடைபெற்றது. பின்னர் சிபிஐ வழக்கறிஞர்விஜயன் வாதிடுகையில், 'குற்றம் நிரூபிக்கப்பட்டதால் குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை, இரட்டை ஆயுள் போன்ற அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும். அரிதானும் அரிதான காவல் கொடூர மரணம் வழக்குகளில் தூக்கு தண்டனை வழங்கலாம் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பொதுவாக காவல் மரணங்களில் நேரடி சாட்சிகள் இருக்க மாட்டார்கள். இந்த வழக்கில் 3 பேர் நேரடி சாட்சிகளாக உள்ளனர். எனவே 9 பேருக்கும் அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும்' என்றார்.

போலீஸார் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், 'குற்றம்சாட்டப்பட்ட 9 பேரும் ஐந்தரை ஆண்டுகள் மேலாக சிறையில் உள்ளனர். குற்ற வழக்கில் ஒருவருக்கு தண்டனை வழங்கும்போது அவரின் குடும்ப சூழல், உடல் நிலை, வயது, சிறையில் இருந்தது ஆகியவற்றை கவனத்தில் கொண்டு முடிவெடுக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம்கூறியுள்ளது.

இந்த வழக்கில் குற்றம் திட்டமிட்டு நடைபெற்றதா,திடீர் ஆத்திரம் காரணமாக நடைபெற்றதாக என்பதையும் பார்க்க வேண்டும். ஜெயராஜ் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் சென்றது வரை ஒன்றும் இல்லை. பென்னிக்ஸ் காவல் நிலையம் சென்ற பிறகு தான் அனைத்தும் நடந்துள்ளது.

பென்னிக்ஸ் போலீஸாரை கோபப்படுத்தும் வகையில் நடந்துள்ளார். இதனால் போலீஸார் தாக்கியுள்ளனர். போலீஸார் உள்நோக்கத்துடன் செயல்படவில்லை. உண்மையில் உள்நோக்கம் இருந்திருந்தால் இருவரை உடலில் உள்ள முக்கிய பாகங்களில் தாக்கியிருப்பார்கள். போலீஸாரின் செயல்பாடு மரணம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இல்லை' என்றனர்.

## பின்னலாடை தயாரிப்புக்கான நூல் விலை கிலோவுக்கு ரூ.12 உயர்வு; தொழில்துறையினர் அதிர்ச்சி



பின்னலாடை தயாரிப்புக்கான நூல் விலை 2 நாளில் கிலோவுக்கு ரூ.12 உயர்ந்துள்ளது. திருப்பூரில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பின்னலாடை நிறுவனங்கள் மற்றும் அதனை சார்ந்த ஜாப் ஒர்க் நிறுவனங்கள் செயல்படுகின்றன. பின்னலாடை தயாரிப்புக்கு மிக முக்கிய மூலப்பொருளாக நூல் இருந்து வருகிறது. தொழில்துறையினர் தங்களுக்கு ஆர்டர்கள் கிடைத்தவுடன், அதற்கேற்ப நூல்களை மொத்தமாக கொள்முதல் செய்து ஆடைகளை தயாரித்து வருவது வழக்கம். நூல் விலை மற்றும் மூலப்பொருட்களின் விலையை கருத்தில் கொண்டு ஆடைகளின் விலை நிர்ணயம்செய்யப்படுகிறது. கிலோவுக்கு ரூ.10ம், நேற்று ரூ.2ம் என மொத்தம் கிலோவுக்கு ரூ.12 உயர்த்தி நூற்பாலைகள் அறிவித்துள்ளது. இதன்படி 10ம் நம்பர் கோம்டு நூல் ரூ.209, 16-ம் நம்பர் ரூ.219, 20-ம் நம்பர் கோம்டு நூல் ரூ.277,24-ம் நம்பர் ரூ.287, 30-ம் நம்பர் ரூ.297, 34-ம் நம்பர் ரூ.317,40-ம் நம்பர் ரூ.337, 20-ம் நம்பர் செமி கோம்டு ரூ.272, 24-ம் நம்பர் ரூ.280,30-ம் நம்பர் ரூ.293,34-ம் நம்பர் ரூ.306, 40-ம் நம்பர் ரூ.325க்கும் விற்பனை செய்யப்படுவதாக நூற்பாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.